யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

FWC

**Field Work Centre**

**தவணைப் பரீட்சை, மார்ச் - 2016**

**Term Examination, March - 2016**

| தரம் :- 13 (2016) | நாடகமும் அரங்கியலும் – I | மூன்று மணித்தியாலங்கள் |
|---|---|---|

பகுதி - I

❖ எல்லா வினாக்களுக்கும் விடை எழுதுக.

❖ 1 தொடக்கம் 40 வரையான வினாக்களுக்கு சரியானதும் பொருத்தமானதுமான விடையைத் தெரிந்தெடுத்து அதன் இலக்கத்தை அடைப்புக்குறியினுள் எழுதுக.

01) 'நாடகம் வாழ்க்கையின் பிரதிபலிப்பாகும். பழக்கவழக்கங்களைக் காட்டும் நிலைக் கண்ணாடியாகும்' எனக் கூறியவர்

(1) அரிஸ்ரோட்டில் (2) பரதமுனிவர்
(3) அபிநவகுப்தர் (4) அலடைஸ் நிக்கொல்
(5) பேனாட்ஷா ( ....... )

02) ஆற்றுகைக் கலைகளை மட்டும் கொண்ட தொகுதியாக கருதக்கூடியது

(1) சிற்பம், நாடகம் (2) ஒமேஹா, இலக்கியம்
(3) நாடகம், ஓவியம் (4) நாடகம், சித்திரம்
(5) பலே, ஒபேஹா ( ....... )

03) நாட்டிய சாஸ்திரத்தில் பரதரால் குறிப்பிடப்பெறாத ரஸம்

(1) அற்புதம் (2) வீரம் (3) சாந்தம்
(4) ரௌத்திரம் (4) சிருங்காரம் ( ....... )

04) ரோம அரங்கில் அரங்கவெளியின் நடிப்பிடம்

(1) வட்டவடிவ மேடை
(2) நீள்சதுர மேடை
(3) அரைவட்டவடிமான மேடை
(4) சதுரவடிவ மேடை
(5) எண்கோண வடிவ மேடை ( ....... )

05) பரதர் கூறும் சாத்விக அபிநயத்தின் எட்டுவித பாவங்களில் குரல் மாற்றத்தைக் குறிப்பது

(1) ஸ்வரபங்க (2) வேபது (3) ரோமான்ச
(4) அஸ்ர (5) ஸ்வேத ( ....... )

06) சமஸ்கிருத நாடக மரபில் கதாநாயகனின் எதிர்பார்ப்புகள் நிறைவேறுமா? இல்லையா எனும் ஆவல் மேலிடும் அந்தர நிலையைக் குறிப்பது

(1) ஆரம்ப (2) யத்ன (3) பிராப்தியாய
(4) நியதாப்தி (5) பலாகம ( ....... )

07) ஒபேறா எனும் வடிவம் தோற்றம் பெற்ற நாடு

(1) ரஷ்யா (2) இத்தாலி (3) அமெரிக்கா
(4) பிரான்சு (5) ஜேர்மனி ( ....... )

08) சைக்கிளோராமா எனப்படுவது
(1) படச்சட்ட அரங்கின் முன்திரை
(2) படச்சட்ட அரங்கின் பக்கதிரை
(3) படச்சட்ட அரங்கின் பின்திரை
(4) படச்சட்ட அரங்கின் பார்ப்போர்கூடம்
(5) படச்சட்ட அரங்கின் நுழைவாயில் (.......)

09) உடல் அசைவுகள், சைகள், மெய்நிலைகள் மூலம் வெளிப்படுத்தப்படும் அபிநயம்
(1) ஆஹார்யம் (2) ஆங்கிகம் (3) ஸாத்விகம்
(4) வார்ச்சிகம் (5) பிரார்தியாயம் (.......)

10) 'புலசந்தோர்' எனும் பாத்திரம் இடம்பெறும் வடிவம்
(1) காமன்கூத்து (2) மகிடிக்கூத்து (3) வாசாப்பு
(4) வடமோடி (5) தென்மோடி (.......)

11) பின்வருவனவற்றுள் தென்மோடிக் கூத்துக்களாக அமைபவை
(1) அலங்காரரூபன், அனுருத்திர நாடகம்
(2) அலங்காரரூபன், தர்ம புத்திரன்
(3) அனுருத்திர நாடகம், தர்ம புத்திரன்
(4) நொண்டி, கர்ணன் போர்
(5) நொண்டி, வாலிவதை (.......)

12) மாரியம்மன் வழிபாட்டுடன் தொடர்புடைய கூத்து வடிவம்
(1) காமன் கூத்து
(2) வசந்தன் கூத்து
(3) மகிடிக் கூத்து
(4) காத்தவராயன கூத்து
(5) கோவலன் கூத்து (.......)

13) ரட்டயகும எனும் சடங்கின் பிரதான நோக்கம்
(1) நோய் தரும் பேய்களை விரட்டுதல்
(2) மழை வளம் வேண்டல்
(3) குழந்தை வரம் வேண்டல்
(4) சிறந்த கணவரைப் பெறுதல்
(5) பயிர்வளம் வேண்டல் (.......)

14) அரிஸ்ரோட்டில் கூறும் திறஜெடியின் பிரதான ஆக்கக்கூறு
(1) கதைப்பின்னல் (2) பாத்திரம் (3) சொல்லாடல்
(4) இசை (5) காட்சி (.......)

15) 'தானாயம்பல' எனும் அரங்கவெளியில் நிகழ்த்தபெறும் ஆற்றுகை வடிவம்
(1) சொக்கரி (2) கோலம் (3) நாடகம்
(4) நூர்த்தி (5) ரட்டயகும (.......)

16) 'காரிய கரவண ராள' எனப்படும் எடுத்துரைக்கும் பாத்திரம் இடம்பெறும் வடிவம்
(1) கோலம் (2) சொக்கரி (3) நாடகம்
(4) நூர்த்தி (5) சன்னியகும (.......)

17) பின்வருவனவற்றுள் சூரன் போருடன் தொடர்புபடாத பாத்திரம்

(1) வீரவாகுதேவர் (2) தாரகாசுரன் (3) கஜமுகாசுரன்

(4) நாரதர் (5) பானுகோபன் (.......)

18) பின்வருவனவற்றுள் நாட்டிய தர்மி பற்றிய சரியான கூற்று

(1) பாத்திரங்களின் இயல்பான நடத்தையைக் காட்டுவது

(2) ஒரு பாத்திரத்தை ஒரு நடிகரே நடிப்பது

(3) லலித அங்க அசைவுகள் அற்றது

(4) இயல்பான அபிநயங்களைக் கொண்டது

(5) பாத்திர அபிநயம், அசைவுகளைக் குறியீடுகளால் சித்திரித்துக் காட்டுவது (.......)

19) கீர்த்தனை நாடகங்களின் தோற்றத்திற்கு காரணமாயமைந்தது

(1) வில்லுப்பாட்டு

(2) கதாகாலேட்சேபம்

(3) தாளலயம்

(4) பள்ளு நாடகம்

(5) குறவஞ்சி நாடகம் (.......)

20) போய்ஸ் $(Boys)$ நாடகக் கம்பனியைத் தோற்றுவித்தவர்

(1) பம்பல் சம்பந்த முதலியார்

(2) கலையரசு சொர்ணலிங்கம்

(3) பேராசிரியர் கணபதிப்பிள்ளை

(4) சங்கரதாஸ் சுவாமிகள்

(5) தியாகராஜ பாகவதர் (.......)

21) இயற்பண்புவாத நாடக மோடியின் முன்னோடி

(1) அன்ரன் செக்கொவ்

(2) ஹென்றிக் இப்சன்

(3) பேர்ட்டோல் மிறெச்ட்

(4) எமிலிசோயா

(5) சாமுவேல் பெக்கெட் (.......)

22) பின்வருவனவற்றுள் தொலைக்காட்சி நாடகம் பற்றிய தவறான கூற்று

(1) தொழினுட்ப சாதனப் பயன்பாட்டுடன் தொடர்புடையது

(2) கட்புல செவிப்புலக் கலை ஊடகமாகும்

(3) படத்தொகுப்பை $(editing)$ முதன்மையாகக் கொண்டது

(4) களஞ்சியப்படுத்தத்தக்க சித்திரிப்புக் கலையாகும்

(5) பார்ப்போர் - ஆற்றுவோரின் நேரடித் துலங்கலுடன் தொடர்புடையது (.......)

23) கற்பித நாடகங்களின் பிரதான போக்கு

(1) உள்ளதை உள்ளவாறு காட்டுதல்

(2) வாழ்க்கையைத் தத்ரூபமாக எடுத்துக்காட்டல்

(3) இயற்கையின் அழகு, காதலின் சிறப்பு, மனிதத் தன்மையின் சிறப்பு என்பவற்றை மனதருள் கிளறச் செய்தல்

(4) பார்ப்போரை நான்காவது சுவராகக் கொண்டிருத்தல்

(5) சிந்திக்கத் தூண்டுவதற்கான போதனைகளை வழங்குதல் (.......)

24) யதார்த்த நாடக மரபின் முன்னோடி எனக் கருதப்படும் இப்சனின் நாடகங்களுள் ஒன்று
(1) சமூகத்தின் தூண்கள் (2) சம்பந்தம்
(3) கடல்வாத்து (4) செரிப்பழத் தோட்டம்
(5) வெண்கட்டி வட்டம் (.......)

25) வானொலி நாடகத்தின் பிரதான பண்பாக அமைவது
(1) வாசிப்பின் மூலம் நுகரப்படுவது
(2) அளிக்கை ஊடகமாக கமரா பயன்படுவது
(3) பார்ப்போரின் நேரடித் துலங்கலை வெளிப்படுத்துவது
(4) அரங்கவெளியொன்றில் நிகழ்த்தப்படுவது
(5) வாய்மொழிச் சித்திரிப்பு மூலம் வெளிப்பாடடைவது (.......)

26) பேராசிரியர் கணபதிப்பிள்ளையின் தழுவல் நாடகமாவது
(1) உடையார் மிடுக்கு
(2) மாணிக்கமாலை
(3) சங்கிலி
(4) பொருளோ பொருள்
(5) துரோகிகள் (.......)

27) பின்வருவனவற்றுள் தென்மோடிக் கூத்தப் பற்றிய சரியான கூற்று
(1) விறுவிறுப்பான, கடினம் குறைந்த ஆடல் கொண்டது.
(2) கடினமும் விறுவிறுப்பும் நுணுக்கமும் கொண்ட ஆடல் உடையது.
(3) பாடல்கள் மெல்லோசையுடையனவாகக் காணப்படும்.
(4) கேடயப் பகுதிகளில் கதைச் சுருக்கம் சொல்லப்படும்.
(5) பாத்திரங்களிற்கான ஆடற் தருக்கள் காணப்படமாட்டாது. (.......)

28) மட்டக்களப்பில் சித்திரை மாதத்தில் வேளாண்மையுடன் தொடர்புடையதாக ஆடப்படும் ஆற்றுகை வடிவம்
(1) பறைமேளக்கூத்து
(2) மகிடிக்கூத்து
(3) வசந்தன்கூத்து
(4) குடமுழுக்குக்கூத்து
(5) புலிக்கூத்து (.......)

29) நாடக எழுத்துருவை உயிரோட்டமான வகையில் மேடையில் சிருஷ்டிக்கும் பணியை மேற்கொள்பவர்
(1) நெறியாளர்
(2) தயாரிப்பாளர்
(3) நாடகாசிரியர்
(4) மேடைமுகாமையாளர்
(5) நினைவூட்டுனர் (.......)

30) நாடகத்தில் வேடஉடை விதானிப்பின் பயன்பாடாக கருதமுடியாதது
(1) நாடக மோடியை இனங்காட்டும்.
(2) பாத்திர குணவியல்பை வெளிப்படுத்தும்.
(3) நாடகத்தின் காலம், சூழல், பண்பாடு என்பவற்றை இனங்காட்டும்.
(4) பகட்டு, ஆடம்பரம் மிக்கதாக காணப்படும்.
(5) நாடகத்தின் மனநிலையை, நாடக வகையை இனங்காட்டும். (.......)



The National e-learning Portal | The General Education

31) நாடகமும் நானும் எனும் நூலை எழுதியவர்
(1) பேராசிரியர் கணபதிப்பிள்ளை
(2) பேராசிரியர் சி. மௌனகுரு
(3) கலையரசு சொர்ணலிங்கம்
(4) சங்கரதாஸ் சுவாமிகள்
(5) பம்பல் சம்பந்த முதலியார் (.......)

32) இசைநாடகத்தில் பெரும்பாலும் பயன்படுத்தப்படும் இசைவகை
(1) ஹிந்துஸ்தானி இசை (2) கிராமிய இசை
(3) மெல்லிசை (4) மேலைத்தேய இசை
(5) கர்நாடக இசை (.......)

33) கூத்து புத்தாக்க முயற்சிகளில் பேராசிரியர் வித்தியானந்தனுடன் துணை நின்ற அண்ணாவியார்
(1) நாகமணிப்போடியார்
(2) மாணிக்கம் அண்ணாவியார்
(3) மெற்றாஸ் மெயில்
(4) க. செல்லையா அண்ணாவியார்
(5) சீர்காழி அண்ணாவியார் (.......)

34) தமிழில் 'பா' நாடகாசிரியர்களாக கருதப்படுவோர்
(1) மஹாகவி, சுந்தரலிங்கம், தாசீசியஸ்
(2) மஹாகவி, முருகையன், அம்பி
(3) மஹாகவி, முருகையன், சுந்தரலிங்கம்
(4) மஹாகவி, சுஹைர் ஹமீத், அம்பி
(5) மகாகவி, அம்பி, சுந்தரலிங்கம் (.......)

35) ஈழத்து தமிழ் நெறியாளர்களுள் ஒருவரான தாசீசியஸ் பற்றிய கூற்றுக்களுள் தவறானது
(1) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மக்கின்ரயரிடம் பயிற்சி பெற்றமை
(2) மகாகவி, 'புதியதொரு வீடு' நாடகத்தை எழுதுவதற்கான ஆலோசனை வழங்கியமை
(3) பொறுத்தது போதும், கூடி விளையாடு பாப்பா போன்ற நாடகத் தயாரிப்புகளில் பங்குகொண்டமை
(4) காலம் சிவக்கிறது எனும் நாடகத்தை எழுதியமை
(5) புலம்பெயர் சூழலில் உடனடி அரங்கத் தயாரிப்பில் ஈடுபட்டமை (.......)


36) 'பாண்டவர்களும் கிளவுஸ் முனிவரும்' எனும் கூத்துருவ நாடகத்தை எழுதியவர்
(1) இ. சிவானந்தன்
(2) இ. முருகையன்
(3) அ. தாசீசியஸ்
(4) நா. சுந்தரலிங்கம்
(5) மகாகவி உருத்திரமூர்த்தி (.......)

37) படத்தில் காட்டப்பட்டுள்ளவர்




(1) தவத்திரு சங்கரதாஸ் சுவாமிகள்
(2) பிரான்சிஸ் ஜெனட்
(3) திரு. க. சிதம்பரநாதன்
(4) அருட்திரு. நீ. மரியசேவியர் அடிகளார்
(5) திரு. க. பாலேந்திரா (.......)

38) படத்தில் உள்ள அரங்கவியலாளர்



(1) ஹென்றிக் இப்சன்
(2) அன்ரன் செக்கோவ்
(3) ஸ்ரனிஸ்லவெஸ்கி
(4) ஹென்றிபெக்
(5) எமிலி சோலா ( .......)

39) படத்தில் காட்டப்பட்டுள்ள ஆற்றுகை வடிவம்



(1) ஒபேறா
(2) நூர்த்தி
(3) பலே
(4) மணிப்புரி
(5) கதக் ( .......)

40) அருகில் உள்ள படம் குறிக்கும் அரங்கு



(1) மகிடிக்கூத்து
(2) வட்டக்களரி
(3) பறைமேளக்கூத்தரங்கு
(4) காமன் பொட்டல்
(5) களத்துமேடு ( .......)

The National e-learning Portal for The General Education

**தரம் :- 13 (2016)** **நாடகமும் அரங்கியலும் – I**

### பகுதி - II

❖ **பகுதி - II இல் பிரிவு A இலிருந்து இரண்டு வினாக்களுக்கும் பிரிவு B இலிருந்து இரண்டு வினாக்களுக்குமாக, நான்கு வினாக்களுக்கு விடை எழுதுக.**

### பிரிவு - A

01) (i) ஆற்றுகைக் கலைகள் என்றால் என்ன? (2 புள்ளி)

(ii) நாடகக் கலையின் சிறப்பியல்புகளைக் கூறி விளக்குக. (6 புள்ளி)

(iii) நாடகமானது, சினிமா மற்றும் வானொலி நாடகம் என்பவற்றிலிருந்து எவ்வாறு வேறுபட்டு நிற்கின்றது என்பதை ஒப்பிட்டு விளக்குக. (7 புள்ளி)

02) (i) கவிதையியல் எனும் நூலில் அரிஸ்ரோட்டில் முன்வைத்துள்ள திறஜெடியின் ஆக்கக்கூறுகள் யாவை? (3 புள்ளி)

(ii) அவை ஒவ்வொன்றையும் பற்றி விளக்குக. (6 புள்ளி)

(iii) அரிஸ்ரோட்டில் கூறிய மூன்றன் ஒருங்கியல்புகள் யாவை? அவை நாடகமொன்றில் எவ்வாறு அமைகின்றன என அவர் குறிப்பிடுவதை விளக்குக. (6 புள்ளி)

03) பின்வரும் அரங்கவெளிகளின் அரங்க கட்டமைப்பையும் ஆற்றுகை முறையையும், ஆற்றுவோர் பார்ப்போர் தொடர்பையும் கூறி விளக்குக.

(i) வட்டக்களரி அரங்கு

(ii) புறொசீனியம் வில்வளைவு அரங்கு

(iii) காமன் பொட்டல்

### பிரிவு - B

04) (i) நடிப்பின் போது பயன்படுத்தப்படும் நால்வகை அபிநயங்களும் எவை? (2 புள்ளி)

(ii) சமஸ்கிருத அரங்கில் பேசப்படும் நாட்டியதர்மி, லோகதர்மியின் இயல்புகளைக் குறிப்பிட்டு விளக்குக. (6 புள்ளி)

(iii) இந்திய சமஸ்கிருத அரங்கில் பார்ப்போர் பெறும் 'ரஸ' உணர்வு பற்றி விளக்குக. (6 புள்ளி)

05) சிங்கள அரங்க வளர்ச்சிக்குப் பின்வருவோரின் பணிகளை குறிப்பிட்டு விளக்குக.

(i) பேராசிரியர் எதிர்வீரச்சந்திரா

(ii) சோமலதா சுபசிங்க

(iii) ஜோண் டி சில்வா ($3 \times 5 = 15$ புள்ளி)

06) பின்வருவனவற்றுள் எவையேனும் மூன்றிற்குச் சிறுகுறிப்பு எழுதுக.

(i) தமிழக தெருக்கூத்து

(ii) சிங்கள ரட்டயகும

(iii) மகிடிக் கூத்து

(iv) பலே

(v) சொக்கரி ($3 \times 5 = 15$ புள்ளி)